# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1993/33 - 2016 නොවැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2016.11.18

*1993/33 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத்திட்ட (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத்திட்ட (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், நகர அபிவிருத்தி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின் கீழ் இதன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு, கொஸ்வத்த சந்தியை விஸ்தரித்தல் உள்ளிட்ட நகர அபிவிருத்தி பணிகளுக்காக தேவைப்பட்டுள்ளதென்பது எனது அபிப்பிராயமானதால் சொல்லப்பட்ட காணித்துண்டுகள் தொடர்புடைய செயற்பாட்டிற்காக தேவையானதென்பதை இவ் விதிப்பின் மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

கொழும்பு,
*2016, நவெம்பர் 16.*

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தின், கடுவெல செயலகப் பிரிவின், கடுவெல மாநகர சபை அதிகாரப்பிரதேசத்தினுள் பல்லேபத்துவ ஹேவாகம கோரளை, தலங்கம வடக்கு கிராமத்தில் அமைந்துள்ள காணிக்குரியதாக வரையப்பட்டுள்ள தள வரைபடத்தின் A மற்றும் B இலக்க துண்டுகளாகக் காட்டப்பட்டுள்ள 18 பேர்ச்சஸ் (0.0455 ஹெக்டெயார்) அளவு கொண்ட கொஸ்வத்த கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையம் அமைந்துள்ள காணிக்கும் மற்றும் கே. ஐ. யு. கெம்பஸ் காணிக்கும் உரிய எல்லைகள் கீழ்வருமாறு :-

***கொஸ்வத்த கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையம் அமைந்துள் காணி A இலக்க துண்டு - விஸ்தீரணம் : 13 பேர்ச்சஸ்***

| | | |
|---|---|---|
| வடக்கு | : | கே. ஐ. யூ. கெம்பஸ் கட்டிடம் மற்றும் வீதிக்காக ஒதுக்கப்பட்ட பகுதி மற்றும் தளவரைபடத்துக்குரிய B இலக்கத்துண்டு ; |
| கிழக்கு | : | கடுவெல வீதி ; |
| தெற்கு | : | இடம்கொடகே அமர ஜயலத் பெரேரா என்பவர் உரித்துக்கூறும் தலங்கம கொஸ்வத்தையில் அமைந்துள்ள சோலை வரி இலக்கம் 247 கட்டிடம் ; |
| மேற்கு | : | கே. ஐ. யு. கெம்பஸ் கட்டிடம். |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**காணித்துண்டு இல. B - விஸ்தீரணம் : 5 பேர்ச்சஸ்**

வடக்கு : வீதிக்காக ஒதுக்கப்பட்ட பகுதிகள் ;
கிழக்கு : வீதிக்காக ஒதுக்கப்பட்ட பகுதிகள்
தெற்கு : A ஆம் இலக்க காணித்துண்டு ;
மேற்கு : கே. ஐ. யு. கெம்பஸ் நிறுவனம் உரித்துக்கூறும் காணி.

*12- 202*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.